பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 19 வெள்ளிக்கிழமை 02.02.2024 அதிர்வு 186

**ஐவர் சுட்டுக்கொலை சம்பவம்:**

## பிரதான சந்தேகநபரின் மனைவி, தந்தை கைது!

பெலியத்த தெற்கு அதிவேக நுழைவாயில் பகுதியில் அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேரா உள்ளிட்ட ஐவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட 04





**தான் பதவி விலக கோமாளிகளே காரணம் என்கிறார் கோட்டா**

# மக்களின் ஆதரவு இன்னமும் உண்டு

## எனினும் மீண்டும் அரசியலில் குதிப்பது குறித்து முடிவில்லையாம்

“நாட்டு மக்களின் அமோக வாக்குகளாலேயே நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன். சிலரின் கோமாளித்தனமான செயற்பாடுகளால்தான் ஜனாதிபதிப் பதவியில் இருந்து நானாகவே விலகியிருந்தேன். மக்களின் ஆதரவு இன்னமும் எனக்கு இருக்கின்றது. எனினும், ஓய்வு நிலையில் இருக்கும் நான் மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை.”


- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆண்டு. அதனால் புதிய கூட்டணிகள் தொடர்பான அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. 04

# ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ரணிலை தனியாகச் சந்தித்துப் பேச ‘மொட்டு’ விருப்பம்



**நேற்றைய கலந்துரையாடலின்போது அக்கட்சியின் எம்.பிக்கள் தெரிவிப்பு**

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தனிப்பட்ட சந்திப்பை நடத்துவதற்கான கோரிக்கையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே, இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். 04





# சிறை அதிகாரிகளின் காவலில் சிகிச்சை பெற்ற சந்தேகநபர் தப்பியோட்டம்

## பொலிஸார் தீவிர தேடுதல்

(வசந்தன்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேக நபர் ஒருவர் தப்பியோடியுள்ள நிலையில் குறித்த கைதியைக் கைது செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

கஞ்சா விற்பனை மற்றும் வைத்திருந்தமை தாடெர்பில் கடந்த 26 ஆம் திகதி நெளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய இளைஞர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் வவுனியா சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

29 ஆம் திகதியன்று சிறைச்சாலையில் சந்தேகநபரான 28 வயதுடைய இளைஞருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே 31 ஆம் திகதி காலை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலிருந்து அவர் தப்பியோடியுள்ளார்.

தப்பியோடிய குறித்த சந்தேக நபரைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கையை வவுனியா பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.



# வவுனியாவில் பொலிஸாரின் வாகனம் மீது தாக்குதல் நடத்திய ஒருவர் மடக்கிப் பிடிப்பு

(வசந்தன்)

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலைய வாகனத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட ஒருவரைப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்காக வாகனத்தில் பொலிஸார் சென்றுள்ளனர்.

இதன்பாதே அந்த வாகனத்தின் மீது வீதியில் நின்ற நபர் ஒருவரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த நபரைப் புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.




### இலங்கையின் சுதந்திர தின எதிர்ப்பு

# போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம்

### சிறீதரன் எம்.பி. அழைப்பு

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில், தியாகச் சாவைத் தழுவிக் கொண்ட முதல் மனிதன் என்னும் மரியாதைக்குரிய திருமலை நடராஜன் அவர்கள், 1957.02.04 ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து, திருமலையில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக்கொடியை அகற்றி கறுப்புக்கொடியை ஏற்றியமைக்காக சிங்களப்பொலிஸாரால்சுட்டுப்படுகொலை செய்யப்பட்டு 67 வருடங்கள் கடந்தும், இந்த நாட்டில் தமிழர்களின் இறைமை இன்றளவும் அங்கீகரிக்கப்படவில்லை.

தமது பூர்வீக மண்ணில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை நிலைநிறுத்த, அரசுக்கும் அரச கட்டமைப்புகளுக்கும் எதிராக எல்லாவழிகளிலும் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள எமது மக்களது அக உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும், எமது மக்களின் குரலாகவுமே யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப் ப ட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படாத வரை, ஈழத்தமிழர்களை இறைமையுள்ள தேசிய இனமாக இலங்கைத் தேசம் அங்கீகரிக்காதவரை, இந்த நாட்டின் சுதந்திர தினம் தமிழ் மக்களின் கரிநாளே என்பதை மீள வலியுறுத்தும் இந்தப் போராட்டத்தில், அரசியற் கட்சி மற்றும் கொள்கை வேறுபாடுகள் எவையுமற்று எமது இனத்தின் உரிமைக்கான ஏகோபித்த குரலாக எல்லோரும் இணைந்து, இதனை ஒரு மக்கள் திரட்சி மிக்க போராட்ட வடிமாக எழுச்சிபெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டு நிற்கிறேன்.” – என்றுள்ளது.




# பொறுப்புடன் செயற்படுங்கள்!

## பொன்சேகாவுக்கு சஜித்தின் கட்சி எச்சரிக்கை





"ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் தவிசாளர் பதவியை வகிக்கும் சரத் பொன்சேகா பொறுப்புடன் செயற்பட வேண்டும். கட்சிக்குள் பேச வேண்டிய விடயங்களைப் பொதுவெளியில் பேசுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் நடத்தப்பட்ட பேரணியை சரத் பொன்சேகா விமர்சித்துள்ளார்.

அத்துடன், முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்கவை கட்சியில் இணைத்துக்கொண்டமை குறித்தும் அவர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி என்பது தனிநபர்களின் சொத்து அல்ல என்று கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் அவர் சாடி வருகின்றார்.

இந்நிலையிலேயே ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# மேலும் 703 பேர் கைது!

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 703 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 525 பேரும், குற்றப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 178 பேரும் அடங்குகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் ஒருவர் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவதுடன், 6 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 9 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜனாதிபதி வேட்பாளர்...

இதன்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, நிமல்சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தமது கட்சி இதுவரையில் தீர்மானம் எடுக்காத நிலையில், ஜனாதிபதியுடன் தனிப்பட்ட கலந்துரையாடல் ஒன்றின் மூலம் இந்த விடயம் தொடர்பில் ஆழமாகக் கலந்துரையாட வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

---

### பிரதான சந்தேக...

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் மனைவி மற்றும் தந்தை ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவத்துக்கான திட்டங்களை வகுத்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான ஓய்வுபெற்ற கடற்படை சிப்பாய், துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட மறுதினம் வெளிநாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

---

### மக்களின் ஆதரவு...

அந்தக் கூட்டணிகள் தொடர்பில் சிலர் என்னுடனும் பேசியுள்ளனர். எனினும், எந்தக் கூட்டணியுடனும் இணைவது தொடர்பில் நான் முடிவு எடுக்கவில்லை.

நாட்டின் சமகால அரசியல் நிலைவரத்தை நான் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். பலத்த சவாலுக்கு மத்தியில் நாட்டின் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அயராது பாடுபடுகின்றார்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றே தீரவேண்டும். அதை ஒத்திவைக்கும் எண்ணம் எவருக்கும் இருக்கக்கூடாது." – என்றார்.

# பெரும்போக நெல் அறுவடை அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பம்

## அடை மழை மற்றும் பெருவெள்ளம் காரணமாக விளைச்சலில் பெரும் பாதிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையின் நெல் உற்பத்தியில் பெரும் பங்கை வகிக்கும் அம்பாறை மாவட்டத்தின் சகல இடங்களிலும் பரவலாக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

ஒரே நேரத்தில் பொத்துவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு , சாய்ந்தமருது , சம்மாந்துறை அம்பாறை மற்றும் கல்முனை விவசாய விரிவாக்கல் பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் பெரும்போக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அறுவடை இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

அண்மையில் பெய்த அடை மழை மற்றும் சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவு திறக்கப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் விளைச்சலில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அனேகமான வயல்கள் முற்றாக சேதமடைந்துள்ளதால் அறுவடை செய்ய முடியாத நிலையில் கைவிடப்பட்டுள்ளன.



ஒரு ஏக்கருக்கு 40 தொடக்கம் 50 மூடைகள்வரை அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் 10 மூடைகள் நெல் கிடைத்தாலே போதும் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்வனவு செய்வதில் உள்ளூர் மற்றும் வெளியூர் அரிசி ஆலை உரிமையாளர்கள் வயல் நிலங்களுக்கே வந்து நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் வெயில் குறைவாக காணப்படுவதால் நெல்லை உலர்த்தி விதை நெல்லுக்காக சேமித்து வைப்பதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்கிடையில் மாவட்ட விவசாய திணைக்களம் , விவசாய விஸ்தரிப்பு நிலையங்களினூடாக நஷ்ட ஈடு வழங்குவதற்கான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்று அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் டீ.எம்.எஸ். பி. திஸாநாயக தெரிவித்துள்ளார்.

# இறைச்சிக் கடைகளை மூடுமாறு அறிவுறுத்தல்

(பாறுக் ஷிஹான்)

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 04 ஆம் திகதி கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் இறைச்சிக் கடைகள் யாவும் பூட்டப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அறிவித்துள்ளார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவித்தலுக்கு அமைவாக அன்றைய தினம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மாட்டிறைச்சி, கோழி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் விலங்கறுமனைகளையும் திறக்காமல் மூடிவிடுமாறு சம்மந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.இந்தக் கடிதத்தின் பிரதிகள் பொலிஸ் நிலையங்களுக்கும்அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# இறக்கக்கண்டி பொதுப் பூங்கா அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

(எஸ். சினீஸ்கான்)

இறக்கக்கண்டி பொதுப் பூங்காவை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று வியாழக்கிழமை (01) விஜயம் செய்து பூங்காவைப் பார்வையிட்டதுடன் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமை

பொருளாதாரச் சிக்கலில் மாட்டி, வங்குரோத்து நிலையில் மூழ்கிக் கிடக்கும் இலங்கையை பிணையெடுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை இலங்கை பெற்றுக் கொள்வது, சாண் ஏற முழம் சறுக்கும் விவகாரமாக இடறுப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசு தனியார் தரப்புகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனை மீளளிப்பது தொடர்பான ஏற்பாடுகளை மறுசீரமைப்புச் செய்வது குறித்து அந்தத் தரப்புகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை முன்னெடுத்து, தனது நல்லெண்ண நடவடிக்கையைச் சரியாக வெளிப்படுத்தத் தவறினால் விரிவாக்கப்பட்ட நிதி உதவி வழங்கும் வசதியின் கீழ் அடுத்த தவணைப் பணத்தை சர்வதேச நாணய நிதியம் வழங்காமல் தாமதிக்க கூடும் என்ற எச்சரிக்கைத் தகவல் இப்போது வெளியாகி உள்ளது.

சீனா உட்பட இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் - அதாவது சர்வதேச நாடுகளுடன் - இத்தகைய கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தி வரும் இலங்கை அரசு, தனியார் கடன் வழங்கும் தரப்புகளிடம் பெற்றுக் கொண்ட கடன் விடயத்தில் உதாசீனமாக நடந்து கொள்வதாகக்கூறப்படுகின்றது.

தனியார் கடன் வழங்குநர்களின் அளவு அல்லது பங்களிப்பு கணிசமானது. குறிப்பிடத்தக்கது. இலங்கை நாடு சர்வதேச நாணய நிதியம் மற்றும் சீனாவின் உதவுத்தொகையை மட்டும் நம்பி இருக்க முடியாது என்ற யதார்த்த நிலையின் ஆழத்தை இலங்கை இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இலங்கைக்கு அடுத்த தவணை உதவு தொகையை வழங்குவதற்கு முன்னர் சீனா மற்றும் பிணைமுறி மூலம் தான் கடன் பெற்ற பிற தரப்பினர் உட்பட அனைத்து வர்த்தகக் கடன் வழங்குநர்களுடனும் இலங்கை விரிவான பேச்சுக்களை நடத்தி, இணக்கமான உடன்பாட்டுக்கு வந்திருக்கும் என்று தாங்கள் எதிர்பார்க்கின்றனர் என சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதிநிதி பீட்டர் புரூவர் கூறியிருக்கின்றார்.

அதாவது பிற நாடுகளுடன் மட்டுமல்லாமல், வெளித் தரப்புகளிடம் தாம் வாங்கிய வர்த்தகக் கடன்களின் மீளளிப்பை மறுசீரமைப்பது தொடர்பிலும் அவர்களுடனும் கலந்துரையாடி ஒரு சமரச - இணக்க - ஏற்பாட்டுக்கு இலங்கை வராவிட்டால் அதற்கு நெருக்கடி காத்திருக்கின்றது என்பது தான் சர்வதேச நாணய நிதியத்தின் குரல் தரவல்ல அதிகாரியின் இந்தக் கருத்துக்குள் தொக்கி நிற்கும் அர்த்தமாகும்.

தனியார் கடன் வழங்குநர்கள் இலங்கை அரசு தங்களுடன் பேசி ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அப்படி அரசைப் பேச வைப்பதற்கான ஒரே மார்க்கம் இப்படி சர்வதேச நாணய நிதியத்தின் கொடுப்பனவு உதவிகள் தொடர்பில் அழுத்தத்தை பிரயோகிப்பதுதான் என்று சர்வதேச ரீதியில் வலிமையான இந்தத் தனியார் கடன் வழங்கு தரப்புகள் கருதுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

நாட்டுக்கு நாடு கடன் வழங்கும் திட்டத்தின் கீழான கடன்களின் மீளளிப்புத் தொடர்பான மறுசீரமைப்பில் அதிக கவனம் செலுத்தும் இலங்கை, அதற்கு வெளியில் தனியார் கடன் வழங்குநர்களிடமிருந்து பெற்ற கடனை மீளளிப்பது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் அசிரத்தையுடன் நடப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

தனியார் கடன் வழங்குநர்கள் தொடர்பான விடயங்களில் இலங்கையின் அணுகுமுறையில் அதிருப்தி இருப்பதாகவும், சர்வதேச மூலதனச் சந்தையில் இலங்கையின் அணுகுமுறை தொடர்பான நம்பகத்தன்மை இதனால் சிதைந்து விடும் ஆபத்தில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடன் பெறுதல் தொடர்பான ஒப்பந்தங்களின் பிரகாரம் தனது கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றாமல் உதாசீனம் செய்தால் அல்லது அத்தரப்புக்களுடன் நேரடியாக பேச மறுத்து உடன்பாட்டுக்கு வராவிட்டால் சர்வதேச மட்டத்தில் வழக்குகள், நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய பிரச்சினைகள் இழுபடும் நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்புத் திட்டமும் அதனால் பெரிதும் பாதிப்புறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் மேகம் சூழ்ந்துள்ள நிலையில் தனியார் கடன் வழங்குநர்களுடன் ஏதேனும் உடன்பாட்டுக்கு வருவது உள்நாட்டு அரசியலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனால் தனியார் கடன் வழங்குநர்கள் தொடர்பான இலங்கையின் கடப்பாடுகளை நிறைவு செய்வதில் பெரும் மெத்தனமாக நடக்கின்றார் என்றும் குற்றம் சுமத்தப்படுகிறது.

இலங்கையின் பிணைமுறி மற்றும் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களின் கடன்கள் தொடர்பான விடயத்துக்கு விரைந்து இணக்கமான உடன்பாட்டுக்கு வரவே அரசு விரும்புகின்றது என நிதி ராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறினாலும், செயலில் அது நடப்பதாக இல்லை என்பதுதான் கள நிலைவரமாக உள்ளது.



# வீதி திருத்தத்தைப் பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர் மஸ்தான்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில் மன்னார் முசலி, பொற்கேணி தொடக்கம் அளக்கட்டு வரையான 3 கிலோ மீற்றர் கார்பெட் பாதை அமைக்கும் வேலைத்திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்த நிலையில் குறித்த இடத்துக்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர் நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இராஜாங்க அமைச்சருடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் , உத்தியோஸ்தர்கள் மற்றும் பிரதேசவாசிகளும் கலந்து கொண்டனர்.

இந்த வீதியானது ஒரு சில வாரங்களில் உத்தியோக பூர்வமாக மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது .



# மாணவர்களுக்குச் சைக்கிள்கள்

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டறிக் கழகம், யூக்றீசியன் ஜேர்மனி ரோட்டறிக் கழகம், செறவுன் யுனைடெட் மற்றும் பாணாந்துறை ரோட்டறிக் கழகம் ஆகியன பெண்கள் மற்றும் சிறுவர் சமூக சேவைகள் அமைச்சுடன் இணைந்து தேவைப்பாடுடைய மாணவர்கள் சிலருக்கு சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கினர்.

இதன்போது சங்கானை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்த தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.




# கல்முனை வைத்தியசாலையில் உலக தொழுநோய் தின நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்திய சாலையில் தொழுநோய் தினத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை (30) வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் தொழுநோய் தின நிகழ்வு நடைபெற்றது.

வைத்தியசாலையின் தோல் நோய் பிரிவினரின் ஏற்பாட்டில் வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் தோல் வைத்திய நிபுணர் டாக்டர் என். தமிழ்வண்ணன் கலந்து கொண்டார்.

வரவேற்புரையைத் தோல் நோய் மருத்துவர் டாக்டர் ஜே.எச்.மஷாகிட் வழங்கினார். விசேட உரையை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் வழங்கினார்.

தோல் வைத்திய நிபுணர் டாக்டர் என். தமிழ்வண்ணன் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தினார்.

இதனை தொடர்ந்து வைத்திய சாலையின் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்களால் டாக்டர் தமிழ்வண்ணன் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.





# கருங்காலி மரக் குற்றிகளுடன் இரண்டு பேர் பொலிஸாரால் கைது!

(அப்துல்சலாம் யாசீம்)

ஹொரவ்பொத்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருகல்ஹின்ன பகுதியில் லொறி ஒன்றில் கருங்காலி மரக் குற்றிகளை மறைமுகமாக கொண்டு சென்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு சந்தேக நபர்களை இன்று அதிகாலை (02) கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரவ்பொத்தானை பரங்கியா வாடி பகுதியில் இருந்து காலி மாவட்டத்துக்கு லொறியில் கருங்காலி மரக் குற்றிகளை ஏற்றிச் செல்வதாக போக்குவரத்து பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதற்கு அமைவாகக் குறித்த வாகனத்தை சோதனையிட்டபோது கோழி எருவுக்குக் கீழ் மறைத்து கருங்காலி குற்றிகள் கொண்டு செல்லப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹடகஸ்த மஹாகுபுக்வெவ பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய சாரதியும் 49 வயதுடைய உதவியாளருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் கெப்பித்திகொள்ளாவ நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று ஹொரவ்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.



# சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று காரைதீவில் சிரமதானம்

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை குடியரசின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இன்று (2) வெள்ளிக்கிழமை கடற்கரை பகுதியை சுத்தம் செய்தனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையிலான பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 'பிளாஸ்டிக் அற்ற வெள்ளிக்கிழமை' என்ற தொனியில் கடலோர சுத்தத்தை மேற்கொண்டனர்.

சிரமதானத்தில் பிரதேச சபையினர் மற்றும் பொலிசார் பங்கு பற்றினர்.



இந்த வேலைத் திட்டத்தை இன்று காலை 7 மணி முதல் 12 மணி வரை மேற்கொண்டனர்.

இதனால் கடலோரத்தின் பெரிய பகுதிகள் பிளாஸ்டிக் அற்ற பிரதேசமாக துப்புரவு செய்யப்பட்டன.

# சைவப் புலவர்களுக்குப் பட்டமளிப்பு!

(காரைதீவு )

அகில இலங்கை சைவத் தமிழ் பண்டிதர் சபையின் நான்காவது வருட சைவப்புலவர் பட்டமளிப்பு விழா நாளை (03) சனிக்கிழமை மட்டக்களப்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சைவத் தமிழ் பண்டிதர் சபையின் தலைவரும், கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதியுமான சைவப் புலவர் பேராசிரியர் கலாநிதி தில்லைநாதன் சதானந்தன் தலைமையில் இது நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசியர் மா. செல்வராஜா, சிறப்பு அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.குணபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த முறை 19 இளம் சைவப் புலவர்களும் 01 சைவ புலவரும் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

2017 இல் அகில இலங்கை சைவத் தமிழ் பண்டிதர் சபை மண்டூரைச் சேர்ந்த சைவப்புலவர் கல்விப் பணிப்பாளர் தில்லைநாதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடத்தி பண்டிதர்களுக்கு சைவ புலவர் பட்டங்கள் இளம் சைவப் புலவர்கள் பட்டங்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது .



# 'உதவும் நுவரெலியா' திட்டத்தில் ஆயிரம் பலாக் கன்றுகள் நடுகை

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் உதவும் உணவுகள் பாதுகாப்பு வேலை திட்டத்தின் கீழ் மஸ்கெலியா சமநெலிய சிங்கள பாடசாலையில் மாவட்ட அரச அதிபர் நந்தன கலபடவால் ஆயிரம் பயன் தரும் பலா கன்றுகள் நடும் விழா இன்று காலை 10 மணிக்கு பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

சமநெலிய சிங்கள பாடசாலையின் அதிபர் அருணசாந்த தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மஸ்கெலியா சுமனாராம விகாரையின் பௌத்த மத குரு தப்போவன சுசீத்த வின் மத அனுஷ்டானத்துடன் விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட அரச அதிபர் நந்தன கலபட மற்றும் உதவி அரச அதிபர் சித்தாரா கமகே, நுவரெலியா உதவி உதவி அரச அதிபர் சுஜீவா போதிமான உட்பட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஜ.எம்.ஓ.எச் . அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் கந்தையா விக்னேஸ்வரன், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

சமநெலிய சிங்கள பாடசாலையில் உள்ள சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் இந்த பலாக் கன்றுகள் நடும் திட்டம் இன்று வைபவ ரீதியாக ஆரம்பமானது.

நிகழ்வில் வித்தியாலய அதிபர் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் எஸ்.ராஜவீரன், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் செயளாலர் சமன் சந்திரசிறி, உதவி அரச அதிபர் சித்தாரா கமகே மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.





# சாதனைக் குழந்தைக்குக் கௌரவம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

'அதிகபட்ச பெருக்கல் அட்டவணைக்கு பதிலளித்த குழந்தை' என்ற உலக சாதனைக்கான சர்வதேச சாதனை புத்தகத்தால் திருகோணமலையைச் சேர்ந்த 2 வயதும் 10 மாதமும் நிரம்பிய சிறுமி தாரா பிரேம்ராஜ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழந்தைக்குக் கிழக்கு மாகாண ஆளுநனர் செந்தில் தொண்டமான் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொண்டார்.

# தெரிவான பயனாளிகளுக்கு பால்மா பொதிகள் வழங்கல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பன்குளம் இராணுவ அதிகாரி லெப்டினன் கேணல் பிலிமத்தலா வேயின் அனுசரணையுடன் பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் ம.துஷ்யந்தனின் வழிகாட்டலுக்கிணங்க பிரதேச செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மொறவெவ பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பால்மா பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மொறவெவ உதவி பிரதேச செயலாளர் கே.சத்தியப்பிரியா, மொறவெவ பிரதேச செயலக கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ரக்ஸ் மற்றும் அஸ்கோ அமைப்பின் வருடாந்த கல்விச் சாத னையாளர் கௌரவிப்பு விழா நாளை (03) சனிக்கிழமை காரைதீவில் நடை பெறவுள்ளது.

காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் காலை 09. 30 மணிய ளவில் அமைப்பின் தலைவர் ஓய்வு நிலை பொறியியயாளர் அ.விவே கானந்தராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு பல் கலைக்கழக தொழில் நுட்பபீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந் திரனும் கலந்து கொள்ளவுள்ளார்.

இங்கு உயர்தரத்தில் மூன்று 'ஏ' பெற்ற மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் பணப் பரிசும் வழங் கப்படவுள்ளது.





# தெரிவு செய்யப்பட்ட மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை பிரதேச செயலகத்தின் மனிதவள அபிவிருத்தி திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுவீடனில் வசிக்கும் ரூபன் – கிரிஷா தம்பதிகளின் புதல்வன் ருக்சானின் 6 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, பொருளாதார நெருக்டிக்கு மத்தியில் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விஷேட விருந்தினராக கிராம சேவகர்களுக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோஸ்தர் ஜெயகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.புரபானந்தன், தன்னார்வ தொண்டு நிறு வனங்களின் முன்னைநாள் அதிகாரி ஜே.எம்.ஜனூஸ், அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி கௌரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# மட்டக்களப்பு லியோ கழகத்தால் மாணவர்களுக்கு உதவிகள்!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு லியோ கழக உறுப்பினர்களால் கஷ்டப் பிரதேச பாடசாலையான தாண்டியடி மகா வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும், ஆடைகளும் வழங்கப்பட்டன.

வறுமை ஒருபோதும் கல்விக்கு தடையாக இருக்கக் கூடாது என்பதற்கு இணங்க தாண்டியடி மகா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்த மட்டக்களப்பு லியோ கழக அங்கத்தவர்கள், பாடசாலை மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக மாணவர்களுடன் கலந்துரையாடி, மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் நோக்கில் ஆலோசனையும் வழிகாட்டலையும் வழங்கினர்.

மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் வகையில் கற்றல் உபகரணங்களையும், ஆடைகளையும் வழங்கினர்.





# மாந்தை மேற்கில் நடைபெற்றது முதியோருக்கு மருத்துவ முகாம்!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாந்தை மேற்கில் முதியவர்களுக்கான விசேட மருத்துவ முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அடம்பன், ஆண்டாங்குளம், உயிலங்குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மருத்துவ தேவைகளை நிறைவேற்ற முடியாத 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் நலன் கருதி விசேட மருத்துவ முகாம் இடம்பெற்றது.

அனுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் முதியவர்களுக்கான விசேட செயற்றிட்டங்களை மெதடிஸ் திருச்சபை டெவ்லிங் நிறுவனம் நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் இலவச மருத்துவ முகாம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் மன்னார் அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெற்றது.

மருத்துவ முகாமின் ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன், முன்னாள் மன்னார் மாவட்ட அரச அதிபர் ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன், டெப்லிங் நிறுவனத்தின் பிரதான இணைப்பாளர் அருட்பணி பு. அன்ரனி சதீஸ், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள், அருட்தந்தையர்கள்,மெதடிஸ் திருச்சபை டெவ்லிங் நிறுவன மாவட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், வைத்தியர்கள், தாதியர்கள், இயன் மருத்துவர்கள், பொது சுகாதார பரிசோதகர் உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 150 மேற்பட்ட முதியவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

முதியவர்களுக்குச் சக்கர நாற்காலி, ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டன. கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டன. அதே நேரம் உள ஆரோக்கியம் மற்றும் மருத்துவ ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் இடம் பெற்றன.






# நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் வீடுகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் திடீர் சோதனை

நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் வீடுகளில் என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு முகமை இன்று அதிரடியாக சோதனை மேற்கொண்டது.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் வீடுகளில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். கோவையில் 2 இடங்கள், சென்னை, திருச்சி, சிவகங்கை, தென்காசி ஆகிய இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

திருச்சியில் நாம் தமிழர் கட்சியின் முன்னணி நிர்வாகி சாட்டை துரை முருகன் வீட்டில் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுள்ளனர். விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் உள்ள நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல்லை மதிவாணன் வீட்டிலும் சோதனை நடைபெற்றுள்ளது . சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் தென்னகம் விஷ்ணு என்பவர் வீட்டிலும் சோதனை நடைபெற்றுள்ளது

கோவை ஆலாந்துறை ஆர்.ஜி.நகரில் ரஞ்சித் குமார் என்பவரின் வீட்டில் இன்று காலை முதல் என்.ஐ.ஏ. அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இதேபோல் காளப்பட்டி பகுதியில் முருகன் என்பவரின் வீட்டிலும் என்.ஐ.ஏ சோதனை நடைபெற்றது.

நாம் தமிழர் கட்சியின் நிர்வாகி இடும்பாவனம் கார்த்திக் என்பவரை நேரில் ஆஜராகும்படி என்.ஐ.ஏ. அழைப்பாணை அனுப்பியுள்ளது. அதற்கு தான் வெளியூரில் இருப்பதால் பெப்ரவரி 5 ஆம் திகதி ஆஜராகிறேன் என அவர் பதில் அனுப்பியுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த பலரின் வீடுகளில் ஒரே நேரத்தில் என்.ஐ.ஏ சோதனை நடத்தி வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரம் இதுவரை அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீட்டிலோ, அலுவலகத்திலோ சோதனைகள் நடத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகவில்லை.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் இது அரசியல் அழுத்தமாக இருக்கலாம் என்று கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

நாம் தமிழர் கட்சி தொடர்ச்சியாக இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சி மற்றும் தமிழகத்தை ஆளும் தி.மு.க. ஆகியவற்றிற்கு எதிராக தீவிரமான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியின் செயல்பாட்டிற்கு பணம் எங்கிருந்து யார் மூலம் எந்த வழியில் வருகிறது என்பது தீவிரமாக கண்காணிக்கப்பட்டதாக கூறப்படுகிறது .

இந்த நிலையில், இன்று இந்த சோதனைகள் இடம்பெற்றுள்ளன. அக்கட்சிக்கு புலம்பெயர் தமிழர்கள் நிதியுதவி அளித்து வருகிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அது எவ்வகையில் வருகிறது, அதற்கான தேவை என்ன, அது சட்டரீதியாக நாட்டின் உள்ளே எடுத்து வரப்படுகின்றதா என்பது தொடர்பிலேயே தீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகம் முழுவதும் 50 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்த சோதனையில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம், தமிழகம் உள்பட 10 மாநிலங்களில் என்.ஐ.ஏ. சோதனை நடத்தியது. அப்போது, திரிபுரா, அஸ்ஸாம், மேற்கு வங்கம், கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா, ஹரியானா, புதுச்சேரி, ராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர் ஆகிய 10 மாநிலங்களில், சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு பதுங்கி இருக்கும் நபர்களைத் தேடும் பணியில் என்.ஐ.ஏ. ஈடுபட்டது. மாநில பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்தச் சோதனையில் ஈடுபட்ட என்.ஐ.ஏ, சுமார் 50 இடங்களில் ஒரே நேரத்தில் சோதனை நடத்தியிருந்தது.

# இடைக்கால பட்ஜெட் ஏமாற்றம் அளிக்கிறது: காங்கிரஸின் எம்.பி சசி தரூர் விமர்சனம்

“மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள இடைக்கால வரவு – செலவு திட்டம் ஏமாற்றமளிக்கிறது. இதில் செயல்கள் குறைவாகவும், லட்சியங்கள் மிகப் பெரிதாகவும் உள்ளன.”

– இவ்வாறு காங்கிரஸ் எம்.பி சசி தரூர் விமர்சித்துள்ளார்.

இடைக்கால வரவு – செலவு திட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இடைக்கால வரவு – செலவு திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறுகிய உரைகளில் இதுவும் ஒன்று. வரவு – செலவு திட்டம் உரையில் பெரிதாக எதுவும் இல்லை. வழக்கம் போல் வார்த்தை ஜாலங்கள் மிகுந்து காணப்பட்டன. செயல்பாடுகளில் மிகக் குறைவான உறுதிப்பாடே இருந்தது. அந்நிய முதலீடுகள் கணிசமான அளவு குறைந்து விட்டது என்பதை ஒப்புக்கொள்ளாமல் அது குறித்து நிதியமைச்சர் பேசி உள்ளார். நம்புகிறோம், எதிர்பார்க்கிறோம் போன்ற தெளிவற்ற மொழியில் அவர் பலவற்றை பேசி இருக்கிறார்.



புள்ளிவிவரங்கள் என்று வரும்போது மிகச் சில புள்ளிவிவரங்களையே அவர் கொடுத்திருக்கிறார். பொருளாதாரத்தின் குறிப்பிட்ட சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண போதிய தெளிவோ, விருப்பமோ இல்லாமல் முற்றிலும் பொதுமையில் பேசப்படும் வகையில் நிதி அமைச்சரின் உரை இருந்தது. இது மிகவும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது.”

– என்றார்.

## தமிழக வெற்றி கழகம்:

# அரசியல் கட்சி பெயரை அறிவித்தார் நடிகர் விஜய்




டில்லியில் உள்ள இந்திய தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு நடிகர் விஜய்யின் மக்கள் இயக்க பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் சென்றுள்ளார்.

இந்த நிலையில், தமிழக வெற்றி கழகம் என்று கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது என நடிகர் விஜய் அதிகாரபூர்வமாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

நடிகர் விஜய் விரைவில் அரசியலுக்கு வர இருக்கிறார் என கூறப்படும் சூழலில், அவரது மக்கள் இயக்கத்தினர் தொடர்ச்சியாக பல்வேறு நலத்திட்டப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, அண்மையில் பெருமழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருள்கள், பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதற்கிடையே அவ்வப்போது கட்சிக்கான அணிகளும் அமைக்கப்பட்டு, தொடர்ச்சியாக நிர்வாகிகளுடன் விஜய் ஆலோசனையில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், கடந்த ஜனவரி 26 ஆம் திகதி பனையூரில் உள்ள அலுவலகத்தில் நடிகர் விஜய் மக்கள் இயக்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்களுடன் திடீர் ஆலோசனை மேற்கொண்டார். வழக்கமாக கட்சி தொடங்கலாமா? மக்களிடையே நமது செல்வாக்கு எவ்வாறு உள்ளது? என்பது தொடர்பாக நிர்வாகிகளிடம் விஜய் கருத்துகளைக் கேட்டறிவார்.

ஆனால் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கட்சியைத் தொடங்க வேண்டும் என உறுதியான முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, ஏற்கனவே மக்களைவைத் தேர்தலுக்கு தயாராகும் பொருட்டு விஜய் கட்சி ஆரம்பிக்க உள்ளார் என கூறப்பட்டு வரும் நிலையில் இன்று டில்லியில் உள்ள இந்திய தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு விஜய் மக்கள் இயக்க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் சென்றார்.

கட்சியின் பெயரைப் பதிவு செய்யும் பொருட்டு புஸ்ஸி ஆனந்த் தேர்தல் ஆணையத்துக்கு சென்றார் என்று தகவல் வெளியானது. நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதையும், கட்சி தொடங்குவதையும் இதுவரை வெளிப்படையாக எங்கும் அறிவிக்கவில்லை.

முதல்முறையாக, தமிழக வெற்றி கழகம் என்று கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக நடிகர் விஜய் அதிகாரபூர்வமாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். இந்த நிகழ்வு தமிழக அரசியல் களத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக நடிகர் விஜய் வெளியிட்டுள்ள முழு அறிக்கையில், "அன்பான தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும், என் பணிவான வணக்கங்கள். "விஜய் மக்கள் இயக்கம்" பல வருடங்களாக தன்னால் இயன்ற வரையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும், சமூக சேவைகளையும், நிவாரண உதவிகளையும் செய்துவருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே. இருப்பினும், முழுமையான சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை கொண்டுவர ஒரு தன்னார்வ அமைப்பினால் மட்டும் இயலாத காரியம். அதற்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுகிறது.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் விரும்பும் அடிப்படை அரசியல் மாற்றத்திற்கு வழிவகுப்பது தான் நமது இலக்கு. தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றபின், எதிர்வரும் மக்களவைத் தேர்தல் முடிந்தவுடன் தமிழ்நாடு சார்ந்த கொள்கைகளின் வெற்றிக்கும், தமிழ்நாட்டு மக்களின் உயர்வுக்குமான எமது கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள், கொடி, சின்னம் மற்றும் செயல் திட்டங்களை முன்வைத்து, மக்கள் சந்திப்பு நிகழ்வுகளுடன், தமிழ்நாட்டு மக்களுக்கான நம் அரசியல் பயணம் துவங்கும்.

இடைப்பட்ட காலத்தில், எமது கட்சியின் தொண்டர்களை அரசியல் மயப்படுத்தி, அமைப்பு ரீதியாக அவர்களை தயார் நிலைக்கு கொண்டு வரும் பணிகளும், கட்சியின் சட்ட விதிகளுக்குட்பட்டு ஜனநாயக முறையில் பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்து, உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் பணிகளும் தீவிரமாக செயல்படுத்தப் படும். தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் மற்றும் கட்சி விரிவாக்க பணிகளுக்கு தேவையான கால அவகாசத்தை கணக்கில் கொண்டே தற்போது எமது கட்சி பதிவிற்காக விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தலில் நாம் போட்டியிடுவதில்லை என்றும், எந்தக் கட்சிக்கும் நம் ஆதரவு இல்லை என்றும் பொதுக்குழு மற்றும் செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தாழ்மையுடன் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, என்னைப் பொறுத்த வரையில் அரசியல் மற்றொரு தொழில் அல்ல் அது ஒரு புனிதமான மக்கள் பணி. அரசியலின் உயரம் மட்டுமல்ல, அதன் நீள அகலத்தையும் அறிந்து தெரிந்துகொள்ள, எம்முன்னோர் பலரிடமிருந்து பாடங்களைப் படித்து நீண்டகாலமாக என்னை அதற்கு தயார்படுத்தி, மனதளவில் பக்குவப் படுத்திக் கொண்டு வருகிறேன். எனவே அரசியல் எனக்கு பொழுதுபோக்கு அல்ல. அது என் ஆழமான வேட்கை. அதில் என்னை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளவே விரும்புகிறேன். என் சார்பில், நான் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள இன்னொரு திரைப்படம் சார்ந்த கடமைகளை, கட்சி பணிகளுக்கு இடையூறு இல்லாத வகையில் முடித்து விட்டு, முழுமையாக, மக்கள் சேவைக்கான அரசியலில் ஈடுபட உள்ளேன். அதுவே தமிழ் நாட்டு மக்களுக்கு நான் செய்யும் நன்றி கடனாக கருதுகிறேன். நன்றி" – என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் தற்போது வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடித்து வரும் படத்தை முடித்துவிட்டு பின்பு முழுமையாக விஜய் அரசியல் பணிகளில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஈரானின் இலக்குகள் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா ஒப்புதல்

சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஈரானிய இலக்குகள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்களுக்கான திட்டங்களுக்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.



இந்த தாக்குதல்கள் பல நாள்களுக்கு நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரிய எல்லைக்கு அருகில் உள்ள ஜோர்டானில் அமெரிக்க படைத்தளம் மீதான ட்ரோன் தாக்குதலில் மூன்று அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளன.

அந்தத் தாக்குதலுக்கு ஈரானின் ஆதரவு போராளிக் குழுவை அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஈரானின் புரட்சிகர காவலர் படையால் ஆயுதம், நிதி மற்றும் பயிற்சி பெற்ற பல போராளிகளைக் கொண்டதாக ஈராக்கில் உள்ள இஸ்லாமிய எதிர்ப்பு என்ற குழு, இயங்குவதாக நம்பப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தாக்குதலுக்கு தாமே பொறுப்பு என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதற்கிடையில், டவர் 22 என அழைக்கப்படும் இராணுவ தளத்தில் 41 அமெரிக்க துருப்புக்கள் காயம் அடைந்த தாக்குதலில் தமக்கு எந்த தொடர்பும் இல்லையென ஈரான் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

எனினும் நான்கு அமெரிக்க அதிகாரிகள், இந்த தளத்தை தாக்க பயன் படுத்தப்பட்ட ஆளில்லா விமானம் ஈரானால் தயாரிக்கப்பட்டது என்று அமெரிக்க உளவுத்துறை நம்புகிறது என்று கூறியுள்ளனர்.

கடந்த வியாழன் அன்று ஒரு செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் தெரிவிக்கையில்,

“அமெரிக்க துருப்புக்கள் மீதான தாக்குதல்களை அமெரிக்கா பொறுத்துக்கொள்ளாது.

அமெரிக்கா, எங்கள் நலன்கள் மற்றும் எங்கள் மக்களைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுப்போம்” என அவர் தெரிவித்தார்.

# மியன்மாரில் அவசரநிலை 6 மாதங்களுக்கு நீட்டிப்பு!

இராணுவ ஆட்சி இடம்பெற்று வரும் மியன்மாரில், மேலும் 6 மாதங்களுக்கு அவசர நிலை நீடிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மின்மாரின் முன்னாள் தலைவரான ஆங் சான் சூச்சியின் ஆட்சி கலைக்கப்பட்டு, இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி 3 வருடங்கள் கடந்துள்ள நிலையிலேயே இவ்வறிப்புவெளியாகியுள்ளது.

இராணுவ ஆட்சி தோற்றம் பெற்றதையடுத்து அந்நாட்டில் ஜனநாயக ஆதரவாளர்களின் கிளர்ச்சி, யுத்தம் மற்றும் போராட்டங்களை ஒடுக்குவதில் இராணுவம் திணறி வருகிறது.

இந்த நிலையில், மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் அவசரநிலையை மேலும் 6 மாதத்துக்கு நீடித்துள்ள இராணுவத் தலைவர் மின் ஆங் ஹ்லைங், ”இராணுவ ஆட்சியை எதிர்க்கும் அனைத்துச் சக்திகளையும் துடைத்தொழிப்போம்” என சூளுரைத்துள்ளார்.

இதேவேளை “மியன்மாரில் மக்கள் ஆட்சி ஏற்பட வேண்டும் என்று ஐ.நா.தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ்” வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்கொரியாவில் இருந்து வடகொரியாவிற்கு சட்டவிரோத முறையில் அனுப்பப்படும் பணம்

வடகொரியாவில் இருந்து வெளியேறி தென்கொரியாவில் தஞ்சமடைந்த வடகொரியர்கள் பலர் தங்களது குடும்பங்களுக்கு சட்டவிரோத முறையில் பணம் அனுப்பி வருகின்றனர்.

இதற்காக தரகர்கள் மூலம் பணத்தை பரிமாறி பின்னர் வடகொரியாவில், கொரியர்கள் என்று அழைக்கப்படும் இடைத்தரகர்கள் வாயிலாக இந்த பணம் பயனாளிகளை சென்று சேர்கிறது.

தென்கொரியாவில் இருக்கும் உறவினரிடமிருந்து பணம் வேண்டுமெனில் வடகொரியர்கள் தரகர்களை அணுகுகிறார்கள்.

தரகர்கள் தங்களது சீன கைத் தொலைபேசி இலக்கங்கள் மூலம் அந்த உறவினரை தொடர்பு கொண்டு சீன வங்கிக்கணக்கிற்கு பணத்தை வைப்பிலிட செய்கின்றனர்.

அதன்பின்னர், சீனாவிலிருந்து பல்வேறு வழிகளில் பணம் வடகொரியா வந்தடைகிறது. அங்குள்ள சிலர் அந்த பணத்தை ரகசியமான முறையில் பயனாளிகளிடம் சேர்க்கின்றனர். இதில் ஒரு தொகையை தரகுப்பணமாகவும் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த நடவடிக்கையைத் தடுக்க செய்ய வடகொரிய அரசாங்கம் பல வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.



# ஜேர்மனி தூதர் - தேசிய மக்கள் சக்தி சந்திப்பு

(கற்பிட்டி செய்தியாளர்)

இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியுமான் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க வுக்கும் இடையிலான சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் நிகழ்கால பொரு ளாதார மற்றும் அரசியல் நிலைமை பற்றியும் மக்கள் எதிர்நோக்கியுள்ள சவால் நிறைந்த நிலைமை பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் ஜேர்மனிய தூதரகத்தின் அரசியல் விவகாரங்கள் பற்றிய ஆலோசகர் திருமதி தரிணி தலுவத்த மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத்தும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக் கது.



# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பசும்பால் விற்பனை நிலையம்!

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதி 'ஆரோக்கியா பாலகம்' எனும் பெயரி லான பசும்பால் மற்றும் பால்சார் உற்பத் திகளின் விற்பனை நிலையம் நேற்று (02) பல்கலைக்கழக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழக பதிவாளர் அ. பகிரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இதன்போது கிழக்குப் பல்கலைக் கழக தொழிநுட்ப பீட பீடாதிபதி பேராசிரி யர் த.மதிவேந்தன், கூட்டுறவுச் அபிவி ருத்தித் திணைக்கள உதவி ஆணை யாளர் கே.வி.தங்கவேல், பல்கலைக் கழக நிதியாளர் எம்.எம்.பாரிஸ், மாண



வர் விவகாரங்கள் திணைக்கள சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.எப்.எம்.மர்சூக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களிடத்தில் தூய பசும் பால் அத்துடன் பால் உற்பத்திகளின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு கொம்மாதுறை கால்நடை அபிவிருத்தி, பால் சேகரிப்பு, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இந்த விற்பனை நிலையத்தை முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.